**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092320

1. District மாவட்டம்: Madurai PS: காவல்நிலையம்: V & AC Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 02/2020 Date நாள்: 08.02.2020

2. (i) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 07.02.2020 Date to : நாள் வரை 08.02.2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.00 Time to : நேரம் வரை 01.30
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.02.2020 Time நேரம் 16.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் -do- Time நேரம் -do-

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 65 Km, South
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Peraiyur Sub Registrar office, Subramania Samy Kovil Street, Watrap Road, Peraiyur, Madurai District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Thirumalai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.R.A. RAMAKRISHNAN
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.03.1965 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் District Deputy Inspection Cell Officer (g) Address : முகவரி District Inspection Cell Office, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tr. A. Karuppasamy, age 35/2020, S/o Angusamy, Assistant (In charge Sub Registrar), Peraiyur Sub Registrar office Madurai District
(2) Tr. P. Karthi, age 30/2020, S/o A. Paramasivam, I.P. Camera Operator, The Zigma Technologies India (P) Ltd, Peraiyur Sub Registrar office, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

... (attach separate sheet if necessary)

Seperate sheet with typed matter in tamil from Page No. 3 to 7 are enclosed herewith

... as mentioned at item No.2 registered the case ... to take up the Investigation / Refused

Tr. P.M. Ramesh Prabu,
Inspector, VRAC, Madurai.

... given to the Complainant /

A. Kannan
INSPR/VRAC
08/02/2020

05.02.2020

Signature of the Officer in-charge, Police Station

08.02.2020
1830 hrs.

A. KANNAN,
Inspector of Police,
VRAC, Madurai.

Name ... Rank ... No.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

இன்று 08.02.2020-ம் தேதி, நான் (அ. கண்ணன்), காவல் ஆய்வாளர், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.R.திருமலை அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்த புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்க கோர, அதனை பெற்று காவல் துணை கண்காணிப்பாளர், வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தி என்னிடம் கொடுத்த புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணவங்களைப் பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு : அனுப்புநர் திரு. R. திருமலை, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். I1 / 113 / 2020 நாள் : 08.02.2020 அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு - மதுரை மாவட்டம் - மதுரை தெற்கு பதிவு மாவட்டம் பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 07.02.2020-ம் தேதி இரவு 19.00 மணி முதல் 08.02.2020-ம் தேதி அதிகாலை 01.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - பணம் ரூ.87,200/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தொடர்பாக. 07.02.2020-ம் தேதி, மதுரை தெற்கு பதிவு மாவட்டம், பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், பொறுப்பு சார்-பதிவாளாராக பணியாற்றும் உதவியாளர் திரு. கருப்பசாமி என்பவர் பத்திர பதிவுசெய்ய வருபவர்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இரவு 19.00 மணிக்கு, நானும் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் A. கண்ணன் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம், வத்ராயிருப்பு சாலையில், சுப்ரமணிய சாமி கோவில் தெருவில் தென்புறத்தில், வடக்கு திசை நோக்கி இருந்த பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு, சென்று அங்கிருந்த அலுவலர்களை விசாரணை செய்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வின் போது, பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில், கிழக்கு திசை நோக்கி பார்த்தவாறு அமைந்த சார்பதிவாளர் மேடைக்கு தெற்குபுறம் சுவரை ஒட்டி வடக்கு நோக்கி இருந்த இரண்டு இருக்கைளில், ஒன்றில் கணிப்பொறி முன்பு, வெளிர் நீல நிற முழுக்கை சட்டை அணிந்த நபர் ஒருவர் பணிசெய்து கொண்டிருக்க, அவருக்கு அருகில் பச்சை நிற முழுக்கை சட்டை அணிந்த ஒருவரும் மற்றும் வெள்ளை நிற முழுக்கை சட்டை அணிந்த நபர் ஒருவரும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

மேற்படி மூன்று நபர்களிடம், என்னையும், உடன் வந்திருந்த போலீஸ் பார்ட்டியினரையும் அறிமுகம் செய்து கொண்டு அந்த மூன்று நபர்களை விசாரித்த போது, வெளிர் நீல நிற முழுக்கை சட்டை அணிந்த நபர், சற்று பதட்டத்துடன் தனது பெயர் கருப்பசாமி என்றும், தான் பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், தன்னிடம் பேசிக்கொண்டிருந்த பச்சை நிற முழுக்கை சட்டை அணிந்த நபரின் பெயர் ஐய்யப்பன் என்றும், அவர் ஆவண எழுத்தர் கோப்பெருந்தேவியின் தம்பி என்றும், மற்றொரு நபரான வெள்ளை நிற முழுக்கை சட்டை அணிந்த நபரின் பெயர் கார்த்தி என்றும், அவர் தங்கள் அலுவலகத்தில் IP கேமரா ஆப்பரேட்டராக பணிபுரிபவ-தாகவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, அவரிடம், மேற்படி அலுவலகத்தில், பத்திர பதிவுக்கு வரும் நபர்கள் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், திடீர் இணை ஆய்வு செய்ய உள்ள விபரம் தெரிவித்து விசாரணை செய்யப்பட்டது. அவரிடம் மேற்படி அலுவலக சார்பதிவாளர் குறித்து கேட்ட போது, 07.02.2020-ம் தேதி, பேரையூர் சார்பதிவக சார்பதிவாளர் காஜாமுகைதீன் அவர்கள், சீனிராஜா, காடனேரி கிராமம், பேரையூர் தாலுகா என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சர்வே எண் தொடர்பாக அனுப்பிய மனு சம்மந்தமான விசாரணைக்காக சென்னை தேனாம்பேட்டையில் உள்ள மாநில தகவல் அறியும் உரிமை ஆணையத்திற்கு ஆஜராக சென்றுவிட்டதாகவும், அதனால், தான் 07.02.2020-ம் தேதி, பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். மற்ற அலுவலர்கள் குறித்து கேட்ட போது, தற்போது அலுவலகத்தில், மற்றொரு உதவியாளர் காமராஜ், IP கேமரா ஆப்பரேட்டர் கார்த்தி மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் ரவிசந்திரன் ஆகியோர் அலுவலில் உள்ளதாகவும், இளநிலை உதவியாளர் சேகர் என்பவர் இன்று அலுவலுக்கு வந்து மதியம் 01.00 மணிக்கு சொந்த வேலை காரணமாக அனுமதி பெற்று சென்று விட்டதாகவும், அலுவலக உதவியாளர் முருகன் என்பவர் தற்செயல்விடுப்பில் இருப்பதாகவும், கருப்பசாமி தெரிவித்தார். தொடர்ந்து, நான், பேரையூர் சார்பவதிக உதவியாளர் கருப்பசாமியை விசாரணை செய்து, திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள முயன்ற போது, கருப்பசாமி அவரது இருக்கை மேஜையின் மீது இரண்டு கத்தைகளாக வைத்திருந்த பணத்தையும், அவற்றுடன் வைத்திருந்த பணம் விபரம் எழுதப்பட்ட வெளிர் பச்சை நிற துண்டுச்சீட்டுகள் இரண்டையும் ஆஜர் செய்தார். மேற்படி இரண்டு கத்தைகளாக இருந்த பணத்தை நான் எண்ணிப்பார்த்த போது, ஒரு கத்தையில் ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் - 86 மொத்தம் ரூ. 43,000/-மும், மற்றொரு கத்தையில் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள் - 20 மொத்தம் ரூ.40,000/-மும் ஆகமொத்தம் ரூ.83,000/- இருந்தது. மேற்படி பணம் ரூ.83,000/-

மற்றும் இரண்டு துண்டுச்சீட்டுக்கள் குறித்து கருப்பசாமியிடம் கேட்ட போது, அவர் தனக்கு எதிரில் நின்றிருந்த ஐய்யப்பனை அடையாளம் காட்டி, அவரது அக்கா ஆவண எழுத்தர் கோப்பெருந்தேவி தயார் செய்து கொடுத்த 11 ஆவணங்களை, இன்று தான் பதிவு செய்து கொடுத்தற்காக, சற்றுமுன்னர் தனக்கு லஞ்சமாக கொடுத்த பணம் என்று கூறினார். எனவே கருப்பசாமி ஆஜர்செய்த, மேற்படி லஞ்சப்பணம் ரூ.83,000/- மற்றும் பணம் விபரம் எழுதப்பட்ட வெளிர் பச்சை நிற இரண்டு துண்டுச்சீட்டுக்கள் ஆகியவற்றை கைப்பற்றினேன். தொடர்ந்து கருப்பசாமியை விசாரணை செய்ய, இன்று 07.02.2020-ம் தேதி மொத்தம் 21 ஆவணங்களை பதிவு செய்ததாக தெரிவித்தார். அலுவலக கணிப்பொறியிலிருந்து Year 2020 Month February Account A Peraiyur Date From : 07-Feb-2020 To 07-Feb-2020 -யை பிரின்ட் அவுட் மற்றும் சார்பதிவக அலுவலக வாபஸ் பதிவேட்டை பார்வையிட்டதில், ஆவண வரிசை எண்கள் 397/2020 முதல் 417/2020 வரை மொத்தம் 21 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் எந்த பத்திர பதிவிற்கும் அரசு கட்டணங்கள் எதுவும் ரொக்கமாக பெறபடவில்லை என்றும், தங்கள் அலுவலகத்தில், சொந்த பணத்தை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் கருப்பசாமி கூறினார். மேலும், கருப்பசாமி, தான் கொண்டுவந்த பணத்தில் ரூ.50/-யை செலவு செய்துவிட்டு மீதப்பணம் என்று சொல்லி தனது சட்டைப்பையிலிருந்து எடுத்து ரூ.502/-யை ஆஜர் செய்தார். அதனை அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்ததால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக உதவியாளர் கருப்பசாமி தனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை எழுதிக்கொடுத்தார். அதன்பின்னர், அலுவலகத்தில் இருந்த ஐயப்பனை விசாரணை செய்த போது, தனது அக்கா ஆவண எழுத்தர் கோப்பெருந்தேவி தயார் செய்து தன்னிடம் கொடுத்த 11 ஆவணங்களை இன்று பேரையூர் சார்பதிவகத்தில் பதிவு செய்து கொடுத்தற்காக, உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளருமான கருப்பசாமிக்கு லஞ்சமாக கொடுத்த பணம் ரூ.83,000/- என்றும், அதற்கான விபரத்தை வெளிர் பச்சை நிற இரண்டு துண்டுச் சீட்டுகளில் எழுதி அவரிடம் கொடுத்ததாகவும் கூறினார். மேலும், ஐய்யப்பனை சோதனை செய்த போது, அவர் சட்டைப்பையிலிருந்து ரூ.720/-யை ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து கேட்ட போது, அவரது சொந்தபணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக ஐய்யப்பன் தனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை எழுதிக்கொடுத்தார். மேலும், அருகில் இருந்த IP கேமரா ஆப்பரேட்டர் கார்த்தி என்பவரை விசாரணை செய்த போது, தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்க்க ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் - 8 மற்றும் இருநூறு ரூபாய் நோட்டு - 1 ஆக மொத்தம் ரூ.4,200/- இருந்தது.

அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, இன்று பத்திரபதிவின் போது ஆவண எழுத்தர்கள் தனக்கு கொடுத்த பணம் என்று கூறினார். மேலும், அவர் தனது மணிபர்ஸிலிருந்து பணம் ரூ.110/-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து கேட்ட போது, தான் இன்று கொண்டு வந்த பணம் ரூ.175/-ல் மதிய உணவு சாப்பிட்டது போக மீதப்பணம் என்று கூறினார். அதனை அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்ததால், பணம் ரூ.110/-யை திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. எனவே, IP கேமரா ஆப்பரேட்டர் கார்த்தி என்பவர், ஆவண எழுத்தர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணம் ரூ.4,200/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக கார்த்தி, தனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை எழுதி கொடுத்தார். தொடர்ந்து, சார்பவதிக அலுவலகத்தில் பணியில் இருந்த உதவியாளர் காமராஜ் மற்றும் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து, சோதனையிட்ட போது, உதவியாளர் காமராஜ் தனது சொந்தப்பணம் என கூறி ஆஜர் செய்த ரூ.210/-யை, தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்ததால் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் ரவிச்சந்திரன் என்பவரிடம் பணம் ஏதும் இல்லை. இது சம்மந்தமாக, காமராஜ் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் தனித்தனியாக எழுத்து மூலமான வாக்குமூலத்தை எழுதிக்கொடுத்தார்கள். மேலும் சோதனை முடிவில், தொடர் விசாரணைக்காக பேரையூர் சார்பதிவக அலுவலகத்திலிருந்த பின்வரும் ஆவணங்களை திரு. கருப்பசாமி, உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளர் மற்றும் திரு. காமராஜ், உதவியாளர் ஆகியோர் ஆஜர் செய்தனர். (1) தொகுதி எண் : 10 தனிநபர் பண இருப்பு பதிவேடு ஆரம்ப நாள் : 02.01.2020, (2) தொகுதி எண் : 112 வருகை பதிவேடு ஆரம்ப நாள் : 02.01.2020, (3) தொகுதி எண் : 106 தற்செயல் விடுப்பு பதிவேடு ஆரம்பம் : 02.01.2020, (4) தொகுதி எண் : 34 வருகைப் பதிவேட்டின் தொடர் குறிப்பு பதிவேடு ஆரம்பம் : 02.01.2020, (5) தொகுதி எண் : 34 தாமத வருகை பதிவேடு ஆரம்பம் : 02.01.2020, (6) ஜெனரல் ரிஜிஸ்டர் பொதுவான வருகைப் பதிவேடு IP Camera Operator P. Karthi, Sub - Registrar Office, Peraiyur, (7) ஜெனரல் ரிஜிஸ்டர் பொதுவான வருகைப் பதிவேடு Data entry Operator Ravichandran, Sub - Registrar Office, Peraiyur, (8) வாபஸ் பதிவேடு (03.02.2020 முதல் 07.02.2020 வரை விபரம் குறிப்பிட்டது), (9) Year 2020 Month February Account A Peraiyur Date From : 07-Feb-2020 To 07-Feb-2020 (பக்கம் 1 முதல் 4 வரை) திடீர் இணை ஆய்வு சம்மந்தமாக தயார் செய்யப்பட்ட குறிப்புரை 08.02.2020 அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் ஆய்வு குறிப்புரை, மேற்படி 9 ஆவணங்களுடன், திரு. கருப்பசாமி, உதவியாளர், பொறுப்பு சார்-பதிவாளர், பேரையூர் சார்பதிவகம் அவர்கள்

ஆஜர் செய்த லஞ்சப்பணம் ரூ.83,000/-, அதனுடன் வைக்கப்பட்டிருந்த பணத்திற்கான விபரம் எழுதப்பட்ட வெளிர் பச்சை நிற இரண்டு துண்டுச்சீட்டுக்கள் மற்றும் IP கேமரா ஆப்பரேட்டர் கார்த்தி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.4,200/-, உதவியாளர் (பொறுப்பு) சார்பதிவாளருமான திரு. கருப்பசாமி, உதவியாளர் திரு. காமராஜ், IP கேமரா ஆப்பரேட்டர் திரு. கார்த்தி, டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் திரு. ரவிச்சந்திரன், ஐய்யப்பன் ஆகியோரது எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தங்களிடம் கொடுக்கின்றேன். ஒப்பம் (R. திருமலை) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மதுரை மாவட்டம், மதுரை. இணைப்பு : மேற்கண்டவாறு. 16.30 hrs / 08.02.2020 received this Report and also directed that Inspector Tr. A. Kannan to register a case on the above report. After that, the FIR & connected files to hand over to Tr. P.M. Ramesh Prabu for conducting further Investigation. (sdxxxx) M.Sathyaseelan 08/02/2020, DSP, V&AC, Madurai.

Sir, Received this report along with connected documents and registered a Regular Case in Madurai V&AC Crime No.02/2020 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 08.02.2020 at 17.00 hrs. (sdxxxx) A. Kannan, Inspr/ V&AC 8/2/2020 (A.KANNAN) Inspector of Police, V&AC, Madurai.

The Original FIR along with the report of District Deputy Inspection Cell Officer, dated 08.02.2020, Joint Surprise Check Proceedings Dated : 08.02.2020 and connected documents are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

A. Kannan
INSPR/V&AC
8/2/2020
(A. KANNAN)
Inspector of Police,
V&AC, Madurai.